



2 ஆவது மாநில மாநாட்டுக்கு, மாநில உரிமை மீட்பு முழக்கமாக நடைபெறவுள்ள இளைஞர் அணி மாநாட்டுக்கான பாடலை கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன் அவர்கள், அண்ணா அறிவாலயத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் திருவுருவச்சிலைகள் அருகே நேற்று முன்தினம் வெளியிட்டார். நிதி உரிமை – கல்வி உரிமை – மொழி உரிமை – வேலைவாய்ப்பு உரிமை என ஒட்டுமொத்தமாக நம் மாநில உரிமைகளை நிலைநாட்டிடும் வகையில் நடைபெற உள்ள கழக இளைஞர் அணி மாநாட்டின் லட்சியத்தை உணர்த்தும் வகையில் இம்மாநாட்டுப் பாடல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் அமைச்சர்கள் உள்பட கழக முன்னணியினர் கலந்து கொண்டனர்.





விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் முக்கிய மைல் கல்லாக அமையவுள்ள Khelo India Youth Games, சென்னை, கோவை, திருச்சி, மதுரை ஆகிய நகரங்களில் இன்று தொடங்கவுள்ளது. இதனையொட்டி, மதுரையில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விளையாட்டு அரங்க மைதானத்தில் நடைபெற்று வரும் ஏற்பாட்டு பணிகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் ஆய்வு செய்தார். மேலும் பாதுகாப்பு வசதி, அடிப்படை சுகாதார வசதிகள், ஓடுதளம் பார்வையாளர் மாடம், வீரர்கள் தங்குமிடம் போன்றவற்றை மேம்படுத்துவதற்காக நடைபெறும் பணிகளை பார்வையிட்டு, அவை தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்தார். உடன் அமைச்சர் பி.மூர்த்தி, மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



“தனது ஒரு ஏக்கர் 52 செண்ட் நிலத்தை அரசுப் பள்ளிக்கு வழங்கிய ஆயி அம்மாளின் கொடையுள்ளத்தைப் போற்றிப் பெருமைப் படுத்துவோம்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பெருமைப் படுத்தியதைத் தொடர்ந்து மதுரையில் உள்ள அவரது இல்லத்திற்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று வாழ்த்துத் தெரிவித்து பாராட்டினார். உடன் அமைச்சர் பி.மூர்த்தி உள்ளிட்ட முன்னணியினர் உள்ளனர்.

### தமிழ்ப் புத்தாண்டு – பொங்கல் திருநாளை ஒட்டி

# குன்றத்தூரில் 5000 பேருக்கு இலவச வேட்டி – சேலைகள்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார்.

காஞ்சிபுரம், ஜன. 19-

தமிழ் புத்தாண்டு - பொங்கல் திருநாளை ஒட்டி குன்றத்தூரில் 5000 பேருக்கு இலவச வேட்டி - சேலைகளை அமைச்சர் தா.மோ. அன்பரசன் வழங்கினார்.

தமிழ் புத்தாண்டு - பொங்கல் திருநாளை ஒட்டி காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசனின் தந்தையார் குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய குழு முன்னாள் தலைவர் தா.மோகலிங்கம் அவர்கள் காணும் பொங்கல் அன்று குன்றத்தூரில் உள்ள ஏழை - எளிய மக்களுக்கு 1986-ஆம் ஆண்டு வேட்டி - சேலை வழங்க தொடங்கி ஆண்டு தோறும் தொடர்ந்து வழங்கி வந்தார்.

அவரது மறைவுக்குப் பின் அவரது மகன் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கடந்த 15 ஆண்டுகளாக தமிழ் புத்தாண்டு - பொங்கல் திருநாளை ஒட்டி குன்றத்தூரில் உள்ள பொது மக்களுக்கு தொடர்ந்து வேட்டி - சேலை சிறப்பாக வழங்கி வருகிறார்.

இந்த ஆண்டும் தமிழ்ப் புத்தாண்டு - பொங்கல் திருநாளை ஒட்டி குன்றத்தூரில் உள்ள அமைச்சர் தா.மோ.அன்பரசன் தனது இல்லத்தின் முன்பு திரண்ட 5000-க்கு மேற்பட்ட ஏழை - எளிய மக்களுக்கு இலவச வேட்டி - சேலை மற்றும் காலண்டர் வழங்கினார்.

காலை 9 மணிக்கு அமைச்சர் தா.மோ.அன்பரசன் பொதுமக்களுக்கு வேட்டி - சேலை வழங்க தொடங்கினார். பகல் 1 மணி வரை 5000-க்கு மேற்பட்ட ஏழை - எளிய மக்களுக்கு வேட்டி - சேலை - காலண்டர் ஆகியவற்றை மகிழ்ச்சியுடன் வழங்கினார்.

வேட்டி - சேலை - காலண்டரை மனமகிழ்ச்சியோடு வாங்கி சென்ற மக்களால் குன்றத்தூரே குதூகலமாக காட்சி அளித்தது பார்க்கும் மக்கள் கையில் எல்லாம் வேட்டி - சேலை - காலண்டர் காணப்பட்டது. மொத்தத்தில் குன்றத்தூரே விழாக்கோலம் பூண்டிருந்தது.

### நாமக்கல் மேற்கு மாவட்டத்தில்

# கழக விவசாய அணி சார்பில் சமத்துவப் பொங்கல்!

## எஸ்.எம்.மதுரா செந்தில் பங்கேற்பு!

நாமக்கல், ஜன. 18 -

உலகெங்கும் உள்ள தமிழர்கள் பொங்கல் பண்டிகையை கொண்டாடி வரும் வேளையில் நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. விவசாய அணி சார்பில் மாட்டுப் பொங்கல் சமத்துவப் பொங்கல் நடத்தப்பட்டது.

திருச்செங்கோடு சி.ஹெச்.பி காலனி பகுதியில் உள்ள நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமையில் 3 பானைகளில் பொங்கல் வைத்து கொண்டாடினர். பொங்கல் பொங்கி வந்தவுடன் பொங்கலோ பொங்கல் என குலவையிட்டு தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி, அனைவருக்கும் பொங்கல் வழங்கப்பட்டது. மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணியைச் சேர்ந்த பெண்கள் பொங்கலினை வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில், திருச்செங்கோடு நகர்மன்ற தலைவர் நளினி சுரேஷ்பாபு, தி.மு.க. நகரச் செயலாளர் கார்த்திகேயன், ஒன்றிய செயலாளர்கள் வட்டூர் தங்கவேல், இளங்கோவன், நாச்சிமுத்து, செல்வம், மாவட்ட துணைச் செயலாளர் மயில்சாமி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஜோதி, தொண்டரணி அமைப்பாளர் ராதிகா, துணை அமைப்பாளர்கள், மாநில சமூக வலைதள அணி பொறுப்பாளர் திருநங்கை அ.ரியா,

தலைமைச் செயற்குழு உறுப்பினர் நடேசன், நாமக்கல் மேற்கு மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் மணியம், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் கந்தசாமி, விவசாய அணி தலைவர் முருகன், மாவட்டத் துணைச் செயலாளர் மயில்சாமி, சார்பு அணி அமைப்பாளர்கள் பாலாஜி, பாலசுப்பிரமணியம், கௌதம், ஷேக் தாவூத், ரமேஷ், கருணாகரன், சாதிக் பாஷா, ராஜவேல், ராஜா மற்றும் துணை அமைப்பாளர்கள் , இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு மாட்டுப் பொங்கலை சமத்துவ பொங்கலாக கொண்டாடினர்.




ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதி மத்தூரில் சமத்துவப் பொங்கல் விழா நடைபெற்றது. விழாவிற்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் கலந்து கொண்டு சமத்துவப் பொங்கலிட்டு அங்கு நடைபெற்ற பெண்களுக்கான கோலப் போட்டியை பார்வையிட்டு சிறந்த கோலமிட்ட பெண்களுக்கு பரிசளித்தார். பின்பு சமபந்தி விருந்தில் கலந்துகொண்டு அனைவருடன் சேர்ந்து உணவு அருந்தினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாநில மகளிர் ஆணைய குழு உறுப்பினர் மாலதி நாராயணசாமி, மாவட்ட துணைச் செயலாளர் சந்திரன், பொருளாளர் கதிரவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் செந்தில், ஒன்றியச் செயலாளர்கள் நரசிம்மன், குண.வசந்தரசு, எக்கூர் செல்வம், ரஜினி செல்வம், குமரேசன், பேரூராட்சித் தலைவர் அமானுல்லா உள்ளிட்ட ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.


